07.09.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.257/2014

அ.சா.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தெய்வநாயகம் | | |
| த/பெ | பெரியண்ணன் | மதம் | |
| கிராமம் | பெரியபாபுசமுத்திரம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 55/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மாலை முரசு பத்திரிக்கையில் நிருபராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2009ம் வருட காலங்களில் கண்டமங்கலம் பி.டி.வோ அலுவலகத்தில் அருகில் கல்கி போட்டோ ஸ்டுடியோ என்ற பெயரில் கடை நடத்தி வந்தேன். நான் எதாவது விசேசத்திற்கு என்னை அழைத்தால் சென்று போட்டோக்கள் எடுப்பேன். கண்டமங்கலம் காவல்நிலையத்தார் என்னை போட்டோ எடுக்க அழைப்பார்கள் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த புகைப்படங்கள் (எண்ணிக்கை 8) நான் எடுக்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 10.9.2009 தேதி காலை கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த தகவலின்பேரில் சோரப்பட்டு to ஆண்டிப்பாளையம் ரோட்டில் பூரணசந்திரன் என்பவரது கரும்பு தோட்டம் அருகில் மெயின் ரோடு ஓரம் வெட்டிக்கொலை

செய்யப்பட்டு இறந்துகிடந்த பு.மு.கா கட்சி பிரமுகரான டி. ஆண்டிப்பாளையத்தைசேர்ந்த பாலையாமுதலியார் என்பவரது பிரேதத்தை கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் கூறியவாறு 8 புகைப்படங்கள் எடுத்தேன் என்றும், அவைகளை காவல்நிலையத்தில் ஆஜர் செய்தேன் என்று இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரித்தபோது மேற்கண்டவாறு சொல்லிக்கொண்டு எதிரிகள் கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் போட்டுக்களை எடுத்துவிட்டு இப்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.